2. தகவல் கோரல்.

(அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பெருந் தலைவர்கள் என அழைப்பதை மாற்றியமைப்பது குறித்து:

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள் தங்களைப் பெருந்தலைவர்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் பெரியார் என்றால் ஈ. வெ. ரா. அவர்களையும், பெருந்தலைவர் என்றால் காமராஜர் அவர்களையும், பேரறிஞர் என்றால் அண்ணா அவர்களையும், இதய தெய்வம் என்றால் புரட்சித் தலைவர் அவர்களையும் குறிக்கும் சொற்கள் ஆகும். ஆகவே பெருந்தலைவர் என்கிற சொற்களுக்குப் பதிலாக தகுந்த வேறு பெயரால் அவர்களைக் குறிப்பிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற விவரத்தை உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நம்முடைய நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் பெருந்தலைவர் என்றால், அது மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களைத்தான் குறிக்கும்; பேரறிஞர் என்றால் அறிஞர் அண்ணா அவர்களைத்தான் குறிக்கும்; மூதறிஞர் என்றால் இராஜாஜி அவர்களைத்தான் குறிக்கும். ஆகவே ஒன்றியப் பெருந்தலைவர்களை ஒன்றியத் தலைவர்கள் என்று அழைக்கலாம் என்று புரட்சித் தலைவருடைய அனுமதி பெற்று அரசு உத்தரவிடும்.

(ஆ) ஓட்டல்களில் பண்டங்களின் விலையைக் குறைப்பது குறித்து.

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த டாக்டர் நாவலர் அவர்கள் கடைசி நாளன்று அறிவிப்பு நிகழ்த்தும்போது ஓட்டல்களில்..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் என்ன காரணத்தினால் மகிழ்ச்சியோடு இருக்கிறீர்கள் என்று சொன்னால், நாம் எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்கலாம்.

திரு. கி. மனோகரன் : பண்டங்களின் விலை ஏற்றப்பட்டதால் அதற்கென்று போடப்பட்ட வரியை ரத்து செய்கிறேன், இனிமேல் பண்டங்களின் விலை ஏறாது என்று உறுதிமொழி அளித்ததைத் தொடர்ந்து மீண்டும் அந்த ஓட்டல் உடைமையாளர்கள் பண்டங்களுக்கு விலையைக் குறைக்காத காரணத்தினால் நேற்றைக்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் கேட்ட கேள்விக்கு உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நிச்சயமாக விலை குறைக்கப்படும், இல்லாவிட்டால் அவர்கள் தண்டனைக்கு உரியவர்கள் ஆவார்கள் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் அடம்பிடித்து விலையை